இருக்கிறது. இந்த மையத்தைச் சார்ந்தவர்களை ஒரு பெண் அணுகியபிறகு பொறுப்பு கொடுக்கப்பட்ட அந்த வழக்கறிஞர் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்தால் அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் வகையில் அதில் கவனம் செலுத்தி அரசு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாக யார் அந்த வழக்கறிஞர்? என்ன விவரம் என்பதை எழுதிக் கொடுத்தால் நிச்சயமாக உரிய நடவடிக்கை துரிதமாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 23. திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

23—

முத்துப் பேட்டையை தலைமையிடமாகக் கொண்டு தனி தாலுகா அமைத்தல்.

*14008—திரு. ஜி. பழனிசாமி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டம், முத்துப் பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு முத்துப்பேட்டை தாலுகா அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்துப் பேட்டையில் புதிய வட்டம் அமைக்கும் நோக்கம் இல்லை.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை—காயிதே மில்லத் மாவட்டம், முத்துப் பேட்டை ஊராட்சி ஒன்றியம் என்பது திருத்துறைப்பூண்டியிலிருந்து 35 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் இருக்கக் கூடிய ஊர். அது ஒரு தனி ஊராட்சி ஒன்றியமாக செயல் பட்டக்கூடிய அளவுக்கு 28 ஊராட்சி மன்றங்களைக் கொண்

டிருக்கிறது. அதை ஒட்டி இருக்கிற மன்னார்குடி தாலுக்கா, கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்திருக்கிற சித்தமல்லி, முத்தாவரம் போன்ற அந்த ரெவின்யூ வட்டங்கள் கூட மன்னார்குடியைத் தலைமை நகரமாகக் கொண்டு அங்கே இருக்கிற மக்கள் தொடர்பு கொள்வதற்கு மிகப் பெரிய சிரமம் ஏற்படுகிறது. ஏற்கனவே முத்துப்பேட்டையை தாலுக்கா தலைமை நகரமாக உருவாக்கி வட்டாட்சியர் அலுவலகம் துவங்குவதற்கு அரசிடத்தில் செயற்குறிப்பு இருந்தது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். மீண்டும் அந்த மக்களுடைய நலனைக் கருதி, அதுவும் பெரும்பகுதி முஸ்லீம் மக்கள் வாழ்கிற பகுதி அது. ஆகவே அவர்கள் கோட்டூர், மன்னார்குடி போன்ற பகுதிகளுக்கு வரக்கூடிய நிலை ஏற்படுகிறது. எந்தப் பணியும் நடைபெற முடியாமல் சிரமம் ஏற்படுகிறது. ஆகவே, அரசு மீண்டும் பரிசீலனை செய்து அங்கே ஒரு வட்டாட்சியர் அலுவலகம் துவங்குவதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம் இரண்டும் ஒரு வட்டமாக இருந்தது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில் வேதாரண்யத்தை தனியாகப் பிரித்து எடுத்தோம். அவர் சொல்லுகிற முத்துப்பேட்டை ஒரு கோடியில் போய்விட்விட்டது. முத்துப்பேட்டை இப்போது ஒரு கோடியில் இருக்கிறது. அவர் சொல்கிற 10 ஊர்களும் மன்னார்குடிக்கும் முத்துப்பேட்டைக்கும் எவ்வளவு தூரம் இருக்கிறதோ அவ்வளவு தூரம்தான் முத்துப்பேட்டைக்கும் வேதாரண்யத்துக்கும் இருக்கிறது. தற்சமயம் அப்படிப்பட்ட நிலைமை தேவையில்லை என்று இந்த அரசும் கருதுகிறது. இப்போது அதற்கு எந்தவிதமான முக்கியத்துவமும் வரவில்லை.

முற்பகல் 10—20

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி வட்டாட்சியினுடைய அலுவலகத்திலேதான் வேதாரண்யமும் சேர்ந்து இருந்தது. அதைப் பிரிக்கிறபோதுதான் அன்று இருந்த மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் முத்துப்பேட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியிலே, அந்த விழாவிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டு இருக்கிறார்கள். அதே நிகழ்ச்சியிலே முத்துப்பேட்டையை வட்டாட்சியர் அலுவலமாக அறிவிப்பதாக

முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அதைத்தான் நான் இப்போது நினைவுபடுத்துகிறேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை. அவர் சொல்லியிருக்கிற, அறிவித்து இருக்கிற அந்தத் திட்டத்தைத் தாங்கள் நிறைவேற்றித் தர முன்வருவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு மிகப் பெரிய உள்ளம். அவர்களுடைய பெரிய உள்ளத்திற்கு அவர்கள் எவ்வளவோ பெரிய அறிவிப்புகளை யெல்லாம் அறிவித்து இருக்கிறார்கள். அவைகளையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக அவர்களுடைய வாரிசாக இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் செய்து கொண்டு வருகிறார்கள். அந்த வரிசைப்படி எது முக்கியத்துவமோ, அந்த வரிசையில் இதுவும் வரும்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வரிசைப்படி வரும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி விட்டார்கள்.

வினா எண் 24— டாக்டர் மு. காளிராஜன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

24—

சிறப்பு மேற்படிப்பு படித்த மருத்துவர்களுக்கு பதவி உயர்வு.

*9672—டாக்டர் மு. காளிராஜன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறப்பு மேற்படிப்பு (Specialities) படித்த மருத்துவர்களுக்கு பதவி உயர்வு அளிக்க, பட்ட மேற்படிப்பு முடித்த தேதியிலிருந்து கணக்கிடப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர் மு. காளிராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையில் சிறப்பு மேற் படிப்பு இளம் வயதில் முடித்த மருத்துவர்கள் 20, 25 வருடங்கள் கழித்துதான் பதவி உயர்வு பெறுகின்றனர்.